தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சித்தார், பெரியாறு அணைகளில் நாளை தண்ணீர் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா உத்தரவு



**சென்னை,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சித்தார் அணைகள், தேனி மாவட்டத்தில் உள்ள பெரியாறு அணை ஆகியவற்றில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 1) முதல் தண்ணீரை திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை:

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை பெருஞ்சாணி, சித்தார்- 1 மற்றும் சித்தார்- 2 ஆகிய அணைகளிலிருந்து கோதையாறு மற்றும் பட்டணங்கால் பாசனத்துக்காக தண்ணீர் திறந்துவிட கோரி அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களது கோரிக்கையை ஏற்று மேற்கண்ட அணைகளிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 1) முதல் தண்ணீரை திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். இதனால் 79 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

இதே போன்று தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக பெரியாறு அணையிலிருந்து தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்ற அப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பெரியாறு அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 1) முதல் தண்ணீரை திறந்து விட ஆணையிட்டுள்ளேன்.

இதன் மூலம் தேனி மாவட்டத்தில் உள்ள தேனி, உத்தமபாளையம் மற்றும் போடிநாயக்கனூர் உள்பட 14,707 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பட்டங்களுக்காக வேளாண் ஆராய்ச்சிகள் கூடாது

**கோவை,**

வேளாண் ஆராய்ச்சிகள் வெறும் பட்டங்களுக்கும், பதவிகளுக்காகவும் இருக்கக் கூடாது என்று, தமிழக வேளாண்துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் அலுவலர் கருத்தரங்க நிறைவு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில், தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி பேசியது:

நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 7 சதவீதம் பேர் தமிழகத்தில் உள்ளனர். அவர்களுக்கு போதிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். ஆராய்ச்சிகள் பட்டங்களுக்கும், பதவிகளுக்காகவும் இருக்கக் கூடாது. வேளாண் துறையினரின் ஆராய்ச்சி என்பது அத்துறையின் வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டும். வானிலை முன்னறிவிப்பு தொழில்நுட்பம் இருந்தபோதிலும் பசிபிக் கடலில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை மாற்றத்தால் "எல் நினோ' என்ற வெப்பச் சலனம் உருவாகியுள்ளது. அதேபோல, வேளாண் துறை சந்திக்கும் முக்கிய பிரச்னை நீர்ப் பற்றாக்குறை ஆகும். எனவே, நீர்ப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டும் என்றார்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா பேசுகையில், ""வரும் 2014-15ல் 145 லட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தி இலக்கை எட்ட முனைப்புடன் செயல்பட வேண்டும்'' என்றார்.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் சத்யபிரத சாஹு பேசுகையில், ""தமிழக தோட்டக்கலைத் துறை அகில இந்திய அளவில் 4ஆவது இடத்தில் உள்ளது. அதேநேரத்தில், வேளாண் துறையில் உள்ள சவால்களுக்கு தொழில்நுட்பம் மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார். வேளாண்மைத் துறை இயக்குநர் மு.ராஜேந்திரன் பேசுகையில், ""வேளாண் சாகுபடிப் பரப்பு 66 லட்சம் ஹெக்டரில் இருந்து 44 லட்சம் ஹெக்டராகக் குறைந்துள்ளது; மழையளவும் 750 மில்லி மீட்டராகக் குறைந்துள்ளது. ஆள்பற்றாக்குறை, தொழில் மயமாதல் போன்ற காரணிகளால் வேளாண் சாகுபடி நிலப்பரப்பு குறைந்து வருகிறது" என்றார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன், எம்.பி.க்கள் ஏ.பி.நாகராஜன் (கோவை), சி.மகேந்திரன் (பொள்ளாச்சி), எம்எல்ஏ-க்கள் வி.சி.ஆறுக்குட்டி, சேலஞ்சர் துரை, ஓ.கே.சின்னராஜ், வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி, ஆராய்ச்சி இயக்குநர் மா.மகேஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## குறையவில்லை வெயில்: சென்னையில் 104 டிகிரி



**சென்னை,**

தமிழகத்தில் அதிகபட்சமாக சென்னையில் 104 டிகிரி வெயில் வெள்ளிக்கிழமை பதிவானது. அக்னி நட்சத்திரக்காலம் முடிந்த பின்னரும் வெயிலின் உக்கிரம் குறையவில்லை.

சென்னையில் தொடர்ந்து வெயில் 100 டிகிரிக்கு அதிகமாக உள்ளது. பகல் நேரங்களில் அனல் காற்று வீசுகிறது.

சென்னையைத் தொடர்ந்து வேலூர், பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, கரூர் பரமத்தி ஆகிய இடங்களிலும் 100 டிகிரிக்கு மேல் வெயில் பதிவானது.

கேரளத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கிய பிறகே வெயிலின் உக்கிரம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை பதிவான வெயில் (டிகிரி பாரன்ஹீட்டில்):

சென்னை 104

வேலூர் 103

திருச்சி, பாளையங்கோட்டை 102

கரூர் பரமத்தி, சேலம் 100

மதுரை, தருமபுரி 98

கோவை 93

கொடைக்கானல் 72

## தடைக்காலம் முடிந்தது: மீன்கள் விலை குறைய வாய்ப்பு

**தூத்துக்குடி,**

45 நாள் மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்ததையடுத்து, மீன்கள் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

மீன்களின் இனப்பெருக்கக் காலம் என்பதால் தமிழக கடல் பகுதிகளில் ஏப்ரல் 15-ஆம் தேதி முதல் மே 29 வரை 45 நாள்கள் ஆண்டுதோறும் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்படுவது வழக்கம்.

இதனால், இக்காலத்தில் தங்களது படகுகளை சீரமைப்பது, வலைகளை சரி செய்வது உள்ளிட்ட பணிகளை மீனவர்கள் மேற்கொள்வர்.

தடைக்காலத்தையொட்டி தூத்துக்குடி மாவட்டத்தில் சுமார் 260 விசைப்படகுகள் 45 நாள்களாக கடலுக்குச் செல்லாததால் மீன்களின் விலை சற்று அதிகரித்தது.

இந்நிலையில், தடைக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து விசைப்படகு மீனவர்கள் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த படகுகளில் சுமார் 250 விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன. கடலுக்குச் சென்ற மீனவர்கள் இரவு 8.30 மணியளவில் கரை திரும்பத் தொடங்கினர்.

45 நாள்களுக்குப் பின் தொழிலுக்குச் சென்றதால் வழக்கத்தைவிட அதிக அளவு மீன்கள் கிடைத்ததாக மீனவர்கள் சிலர் தெரிவித்தனர்.

சீலா, பாறை, ஊழி, அயிலை போன்ற உயர் ரக மீன்கள் அதிக அளவில் கிடைத்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

மீன்களின் வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் விலை குறைய வாய்ப்பு இருப்பதாக வியாபாரிகள் கூறினர்.

## வால்பாறையில் தொடங்கியது கோடை விழா



வால்பாறை கோடைவிழா மலர்க் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த வண்ணப் பூக்கள். (வலது) தோட்டக்கலைத் துறை சார்பில் 9 ஆயிரம் ரோஜா மலர்கள் கொண்டு 7 அடி உயரம், 12 அடி நீளம் மற்றும் 4 அடி அகலத்திற்கு வடிவமைக்கப்பட்டிருந்த சிங்க உருவம்.

**வால்பாறை,**

வால்பாறை கோடைவிழாவை மலர்க் கண்காட்சியுடன் தமிழக சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன் வெள்ளிக்கிழமை காலை துவக்கி வைத்தார்.

"வால்பாறை கோடைவிழா' ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்களுக்கு வால்பாறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற துவக்க விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார்.

பொள்ளாச்சி எம்.பி. மகேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் க.கற்பகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மலர்க் கண்காட்சி, காய்கறிக் கண்காட்சி மற்றும் பல்வேறு துறைகளின் அரங்குகளை தமிழக சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன் திறந்து வைத்தார்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு: ஜூன் 11-இல் இலவச கருத்தரங்கம்

**சென்னை,**

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச கருத்தரங்கம் ஜூன் 11-ஆம் தேதி நடைபெற உள்ளது.

இது குறித்து கோழியின ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன்படி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், "கிராமப் பொருளாதார முன்னேற்றத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு' என்ற தலைப்பில் இலவச கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி ஜூன் 11-ஆம் தேதி நடைபெற உள்ளது.

தமிழகத்தில் உள்ள அனைத்து பண்ணையாளர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு பல்வேறு தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெறலாம். முதலில் பதிவு செய்யும் 300 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு 044- 25552650, 9790832834 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**<u>உணவுப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி</u>**

**திண்டுக்கல்,**

வேளாண் உணவு பொருள்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, மத்திய அரசின் அபிடா நிறுவனத்தின் சார்பில் மாவட்ட வேளாண்மை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு, வேளாண்மை இணை இயக்குநர் ந.சம்பத்குமார் தலைமை வகித்தார். வேளாண்மை வணிக அலுவலர் ஜெயக்குமார் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை துணை இயக்குநர்(வணிகம்) திட்டத்தின் நோக்கங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற அபிடா நிறுவனத்தின் கள அலுவலர் தங்கம் ராமசந்திரன் கூட்டத்தில் பேசியது:

விவசாயிகள் தனிநபராக அல்லாமல், குழுக்கள் அமைத்து உணவு பொருள்களை பதப்படுத்த முன் வர வேண்டும். அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பதப்படுத்தப்பட்ட உணவு பொருள்களை தரக்கட்டுப்பாடு செய்த பின் வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும்.

அதற்கான வழிமுறைகள் பற்றியும், ஒவ்வொரு இனத்திற்கும் வழங்கப்படும் மானிய விவரங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றார்.

மேலும் திண்டுக்கல் மாவட்டத்தில் மா, கொய்யா மற்றும் வெங்காயம் உள்ளிட்ட விளைபொருள்களுக்கு ஏற்றுமதி குழுக்கள் அமைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் அவர் விளக்கம் அளித்தார்.

கூட்டத்தில், திண்டுக்கல், விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் பகுதிகளைச் சேர்ந்த வேளாண் உணவு உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அதிக அளவில் பங்கேற்றனர்.

**<u>பயனாளிகளை தேர்வு செய்ய சிறப்பு கிராம சபைக் கூட்டம்</u>**

**விருதுநகர்,**

விருதுநகர் மாவட்டத்தில் இந்த ஆண்டுக்கான கறவை மாடுகள், ஆடுகள் வழங்க தகுதியான பயனாளிகளை கிராமக் குழு மூலம் தேர்வு செய்வதற்கான சிறப்பு கிராம சபைக் கூட்டம் குறிப்பிட்ட நாள்களில் நடத்தப்பட இருக்கிறது.

இது குறித்து ஆட்சியர் டி.என். ஹரிஹரன் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: விருதுநகர் மாவட்டத்தில் தமிழக அரசின் சிறப்புத் திட்டமான ஏழை-எளிய மக்களுக்கு இலவச கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இந்த ஆண்டு ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கிராமப் புறங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. இதற்காக பயன்பெறவுள்ள பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் அளிப்பதற்கும், இத்திட்டம் குறித்து எடுத்துரைக்கும் வகையிலும் ஜூன் மாதத்துக்கான சிறப்பு கிராம சபைக் கூட்டம் ஜூன் 9ஆம் தேதியும், ஜூலை மாதத்துக்கான கூட்டம் 10ஆம் தேதியும், ஆகஸ்ட் மாதத்துக்கான கூட்டம் 11ஆம் தேதியும், இத்திட்டத்துக்காக தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் நடைபெற உள்ளது.

அதே போல், பயனாளிகள் பட்டியலை கிராமக் குழு மூலம் ஒப்புதல் பெற்று இறுதி செய்வதற்கான கிராம சபைக் கூட்டம் ஜூன் 18ஆம் தேதியும், ஜூலை மாத ஒதுக்கீட்டுக்கான கூட்டம் 19ஆம் தேதியும், ஆகஸ்டு மாத ஒதுக்கீட்டுக்கான கூட்டம் 20ஆம் தேதியும் நடைபெற உள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள குறிப்பிட்ட ஊராட்சிகளின் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

கறவை மாடுகள்: அருப்புக்கோட்டை ஒன்றியம் சுக்கிலநத்தம், திருச்சுழி ஒன்றியம் ராணிசேதுபுரம் ஆகிய கிராமங்களில் தலா 50 பேருக்கு ஜூன் மாதத்தில் வழங்கப்பட இருக்கிறது. அதேபோல், அருப்புக்கோட்டை- ராமானுஜபுரம், திருச்சுழி- உடையனாம்பட்டி கிராமங்களில் தலா 50 பேருக்கு ஜூலை மாதத்திலும், அருப்புக்கோட்டை-மீனாட்சிபுரம், திருச்சுழி- சலுக்குவார்பட்டி கிராமங்களில் தலா 50 பேருக்கு ஆகஸ்டு மாதத்திலும் என மொத்தம் 300 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட உள்ளன.

இலவச ஆடுகள்: இதே போல் ஜூன் மாதத்தில் அருப்புக்கோட்டை ஒன்றியம் பெரியவள்ளிக்குளம்- 29 பேர், செம்பட்டி- 131 பேர், காரியாபட்டி ஒன்றியம்

பிசிண்டி-30 பேர், எஸ். கல்லுப்பட்டி- 34பேர், தோணுகால்- 54 பேர், ராஜபாளையம் ஒன்றியம் புத்தூர்- 58 பேர், சாத்தூர் ஒன்றியம் அம்மாபட்டி- 18 பேர், பெரிய ஓடைப்பட்டி- 10 பேர், புல்வாய்பட்டி-9 பேர், ரெங்கப்பன் நாயக்கன்பட்டி- 16 பேர், சங்கரநத்தம்- 15 பேர், சிவகாசி ஒன்றியம் சித்தமநாயக்கன்பட்டி- 25 பேர், சுக்கிரிவார்பட்டி- 41 பேர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம் படிக்காசு வைத்தான்பட்டி- 135 பேர், திருச்சுழி ஒன்றியம் சவ்வாஸ்புரம்- 32 பேர், சென்னிலைக்குடி- 19 பேர், விருதுநகர் ஒன்றியம் பெரியபேராளி- 52 பேர் என பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட உள்ளன.

அதே போல் ஜூலை மாதத்தில் வத்திராயிருப்பு ஒன்றியம் மாத்தூர்- 59 பேர், அருப்புக்கோட்டை ஒன்றியம் பெரியநாயகிபுரம்- 24 பேர், புலியூரான்- 42 பேர், காரியாபட்டி ஒன்றியம் எஸ். மரைக்குளம்- 35 பேர், டி. செட்டிக்குளம்- 12 பேர், நரிக்குடி ஒன்றியம் ரெகுநாதமடை- 36 பேர், சாலை இலுப்பன்குளம்- 37 பேர், டி. வேலங்குடி- 35 பேர், ராஜபாளையம் ஒன்றியம் சிவலிங்கபுரம்- 37 பேர், சாத்தூர் ஒன்றியம் பெத்துரெட்டிபட்டி- 24 பேர், போத்திரெட்டிபட்டி- 25 பேர், சடையம்பட்டி- 37 பேர், சிவகாசி ஒன்றியம் தச்சகுடி- 36 பேர், வி. சொக்கலிங்காபுரம்- 36 பேர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம் பாட்டக்குளம், சல்லிபட்டி- 57 பேர், திருச்சுழி ஒன்றியம் பூலாங்கல்- 66 பேர், வெம்பக்கோட்டை ஒன்றியம் புலிப்பாறைப்பட்டி- 16 பேர், ராமுத்தேவன்பட்டி- 15 பேர், சங்கரபாண்டியாபுரம்- 20 பேர், சூரார்பட்டி- 27 பேர், சுப்பிரமணியபுரம்- 19 பேர், வத்திராயிருப்பு ஒன்றியம் ராமச்சந்திரபுரம்- 66 பேர்.

மேலும், ஆகஸ்ட் மாதத்தில் அருப்புக்கோட்டை ஒன்றியம் போடம்பட்டி-16 பேர், சேதுராஜபுரம்- 16 பேர், காரியாபட்டி ஒன்றியம் வேப்பங்குளம்- 24 பேர், தண்டியனேந்தல்- 31 பேர், நரிக்குடி ஒன்றியம் புல்வாய்க்கரை- 28 பேர், சேதுபுரம்- 19 பேர், டி. கடம்பங்குளம்- 8 பேர், ராஜபாளையம் ஒன்றியம் எஸ். ராமலிங்காபுரம்- 182 பேர், சாத்தூர் ஒன்றியம் ஒத்தையால்- 33 பேர், சிவகாசி ஒன்றியம் சாமிநத்தம்- 60 பேர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம் பிள்ளையார்நத்தம்- 65 பேர், வெம்பக்கோட்டை ஒன்றியம் செவல்பட்டி- 84 பேர், விருதுநகர் ஒன்றியம் புல்லலக்கோட்டை- 26 பேர் என மொத்தம் 2061 பயனாளிகளுக்கு அந்தந்த குறிப்பிட்ட மாதங்களில் வழங்கப்பட இருக்கின்றன.

இதற்கான விண்ணப்பங்களை பயனாளிகள் குறிப்பிட்ட நாள்களில் நடைபெற உள்ள சிறப்பு கிராம சபைக் கூட்டத்தில் கொடுக்க வேண்டும். அந்த மனுக்கள் கிராம குழு மூலம் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து கிராம சபைக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதையடுத்து பயனாளிகள் பட்டியலை மாவட்ட நிர்வாகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என ஆட்சியர் டி.என். ஹரிஹரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## <u>தோட்டப் பயிர்கள் குறித்த கருத்தரங்கம்</u>

**கும்மிடிப்பூண்டி**,

கும்மிடிப்பூண்டியில் விவசாயிகளுக்கு தோட்டப் பயிர்கள் குறித்த கருத்தரங்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தேசிய தோட்டக்கலை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் நடைபெற்ற இந்த கருத்தரங்குக்கு தோட்டக்கலை உதவி இயக்குனர் ராமலிங்கம் தலைமை வகித்தார். இதனைத்தொடர்ந்து மீஞ்சூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ரபியுல்லா பேசினார். துணை வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன், உயிரி உரங்களை தோட்டப் பயிர்களுக்கு பயன்படுத்தும் முறை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவிப் பொறியாளர் துரைசாமி பங்கேற்று தோட்டப்பயிர்களுக்கு தற்போதுள்ள நவீன பாசன கருவிகள் குறித்து விளக்கினார். வேளாண்மை வணிகப் பிரிவு அலுவலர் அருள்முருகன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

## <u>கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க சிறப்பு முகாம்</u>

**ஸ்ரீபெரும்புதூர்,**

தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வெள்ளாடுகளுக்கு சிறப்பு குடற்புழு நீக்க முகாம் நந்தம்பாக்கம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. குன்றத்தூர் ஒன்றியம், நந்தம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அரசு பள்ளி வளாகத்தில் நடந்த முகாமுக்கு, காஞ்சிபுரம் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் ராஜன்பிஆன்டனி தலைமை தாங்கினார். குன்றத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் பழனி, ஊராட்சி

மன்றத் தலைவர் ரமணி ஜெயசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீபெரும்புதூர் சட்டப்பேரவை உறுப்பினர் மொளச்சூர் ரா.பெருமாள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க சொட்டு மருந்து வழங்கி முகாமை தொடங்கி வைத்தார். முகாமில், நந்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த 108 பயனாளிகளின் வெள்ளாடுகளுக்கும் குடற்புழு நீக்க சொட்டு மருந்து வழங்கப்பட்டது. இதில் சோமங்கலம் கால்நடை உதவி மருத்துவர் சாந்தி, ஒன்றிய குழு உறுப்பினர் சுந்தர்ராஜன், கால்நடை உதவியாளர்கள் வீரராகவன், அம்மு, சந்திரசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## **பசுமைக்குடில் சாகுபடிக்கு ரூ.18 லட்சம் வரை மானியம்: ஆட்சியர்**

**ராமநாதபுரம்,**

பசுமைக்குடில் சாகுபடி செய்ய ஒரு பயனாளிக்கு ரூ.18லட்சம் வரை மானியம் வழங்கப்பட இருப்பதாக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் க.நந்தகுமார் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் கிணற்று நீரைக் கொண்டும், கண்மாய் பாசன நீரைக் கொண்டும் வருடத்தில் குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டுமே காய்கறி பயிர்கள் சாகுபடி செய்கின்றனர். இதற்கு மாற்றாக பசுமைக்குடில் எனப்படும் புதிய தொழில் நுட்பம் மூலம் சந்தை மதிப்பு மிகுந்த காய்கறிகளான வீரிய ஒட்டு ரக வெள்ளரி, குடை மிளகாய் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்யலாம். பசுமைக்குடிலில் தட்பவெட்ப சூழ்நிலைகளை மாற்றிக் கொள்ளக்கூடிய சிறப்பு வசதிகள் இருப்பதால் வருடம் முழுவதும் பயிர் சாகுபடி செய்து 4 முதல் 5 மடங்கு வரை கூடுதல் மகசூல் பெறலாம். மேலும் சந்தையில் காய்கறி வரத்து இல்லாத காலங்களிலும் பசுமைக்குடில் சாகுபடி மூலம் காய்கறி உற்பத்தி செய்ய முடியும். இதனால் காய்கறிகளுக்கு கூடுதல் விலையும், விவசாயிகளுக்கு அதிக வருமானமும் கிடைக்கும். பசுமைக்குடிலில் வெள்ளரி வருடத்திற்கு 3 முறை பயிரிடலாம். ரூ.10லட்சம் செலவில் 10 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் பசுமை குடில் அமைத்து வெள்ளரி சாகுபடி செய்தால் வருடத்திற்கு 40-45டன் வரை மகசூல் பெற முடியும். இதன் மூலம் வருடத்திற்கு 9 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். 2வது வருடத்திலிருந்து பசுமைக்குடில் அமைக்க ஆகும் செலவு இல்லாததால் நிகர வருமானம் ரூ.7லட்சம் வரை கிடைக்கும் வாய்ப்பு

உள்ளது. பசுமைக்குடில் அமைக்க தோட்டக்கலைத் துறையின் மூலம் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டத்தின் கீழ் மானியம் அளிக்கப்படுகிறது. ஒரு பயனாளி அதிகபட்சமாக 40 ஆயிரம் சதுர அடி வரை மானியம் பெறலாம். 10 ஆயிரம் சதுர அடிக்கு 50 சதவிகித மானியமாக ரூ.4.65 லட்சம் வரை மானியம் பெறலாம். அதிகபட்சமாக 40 ஆயிரம் சதுர அடிக்கு ரூ.18லட்சம் வரை இத்திட்டத்தின் கீழ் பயன்பெற முடியும். ஆர்வமுள்ள விவசாயிகள் ராமநாதபுரம் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மற்றும் 04567-230328 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறும் ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கறிக்கோழி, முட்டை விலை நிலவரம்

**பல்லடம்,**

கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை கிலோ ரூ.72 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் வெள்ளிக்கிழமை கொள்முதல் விலை கிலோ ரூ.75 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு வெள்ளிக்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.3.05, சென்னையில் ரூ.3.40.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 47.07 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 47.07 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,335 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.7 டி.எம்.சி.

## இன்று கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம்

**திருவண்ணாமலை,**

திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் ஆடு, மாடுகளுக்கான இலவச இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் சனிக்கிழமை (மே 31) நடைபெறுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பயனாளிகளுக்கு இலவச ஆடு, மாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு வழங்கப்பட்ட ஆடு, மாடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், வெள்ளாடுகள் மற்றும் ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் மாவட்டம் முழுவதும் இலவச மருத்துவ முகாம்கள் சனிக்கிழமை நடத்தப்படுகின்றன.

இம் முகாம்களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்கமும் செய்யப்படுகிறது. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெறும் இம் முகாம்களில் பயனாளிகள் தங்களது ஆடு, மாடுகளை அழைத்துச் சென்று இலவசமாக சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

இதுதவிர, இலவசமாக வழங்கப்பட்ட ஆடு, மாடுகளுடன் மற்ற ஆடு, மாடுகளையும் பயனாளிகள் முகாம்களுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## விவசாயிகளுக்கு மணிலா விதை

**செங்கம்,**

செங்கம் அருகே உள்ள பாய்ச்சல் கிராமத்தில் விவசாயிகளுக்கு மணிலா விதை வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

செங்கத்தை அடுத்த பாய்ச்சல் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு மானியத்தில் மணிலா விதை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பாய்ச்சல் கூட்டுறவு கடன் சங்கத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். பாய்ச்சல் ஊராட்சி மன்றத் தலைவர் மணி முன்னிலை வகித்தார்.

வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் சிவகுமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக செங்கம் ஒன்றியக் குழு தலைவர் எம்.கணேசன் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு மணிலா விதையை வழங்கினார் .

நிகழ்ச்சியில் துணை வேளாண்மை அலுவலர்கள் ஜெயசீலன், சங்கர், தண்டபாணி, வேளாண்மை அலுவலர்கள் ராமஜெயம், சங்கர் மற்றும் விவசாயிகள், வேளாண்மைத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## ஒகேனக்கல்லில் 15 மி.மீ. மழை

**தருமபுரி,**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் பகுதியில் 15.30 மி.மீட்டர் மழை பதிவானது.

தருமபுரி மாவட்டத்தில், கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் கோடை மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், வியாழக்கிழமை இரவு திடீரென மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பரவலாக இடி, மின்னலுடன் மழை பெய்தது.

இதில், ஒகேனக்கல் பகுதியில் 15.30 மி.மீ, அரூர் 4.30, பாப்பிரெட்டிப்பட்டியில் 1 மி.மீட்டர் மழையும் பதிவானது. மாவட்டத்தில் பெய்த சராசரி மழையளவு 2.94 மி.மீ. ஆகும்.

## பருவமழை வழக்கமான நாளில் தொடங்க சாத்தியக்கூறு இல்லை

**நாமக்கல்,**

தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை தொடங்கும் ஜூன் 1ஆம் தேதியில் நிகழாண்டு பருவமழை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று, நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு (மே 31 முதல் ஜூன் 3ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் பல இடங்களில் 1.5 மிமீ முதல் 5 மிமீ வரை மழை பெய்யக்கூடும். காற்றின்

திசைவேகம் மணிக்கு 4 கி.மீ முதல் 5 கி.மீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 96.8 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 26 சதம் முதல் அதிகபட்சம் 75 சதம் வரை இருக்கும்.

கோழிப் பண்ணையாளர்களுக்கு..: கோடைக் காலம் முடிவடையக்கூடிய நிலையில் தென்மேற்குப் பருவ மழை இயல்பாகத் தொடங்க வேண்டும். நிகழாண்டு ஜூன் 1ஆம் தேதியில் பருவ மழை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் வலுவாக தென்படவில்லை. எனினும், மேகமூட்டமும், லேசான மழையும் காணப்படுவதால் பகல், இரவு வெப்ப அளவுகள் 2 டிகிரி செல்சியஸ் வரை குறைந்து நிலவும். இதனால், கோழிகளிடையே இதுவரை நிலவி வந்த வெப்ப அயற்சி, வெப்ப அதிர்ச்சி படிப்படியாகக் குறையத் தொடங்கும்.

காற்றின் வேகம் இனிவரும் நாள்களில் உயரக்கூடும் என்பதால் பண்ணைகளின் பக்கவாட்டில் படுதாவைக் கட்டத் தயார் செய்திட வேண்டும்.

கோழியின நோய் ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் வெப்ப அதிர்ச்சி, மேல்மூச்சுக்குழாய் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, பண்ணையாளர்கள் வெப்பத் தாக்கம் அதிகமிருக்கும் நாள்களில் கோடைக்கால பராமரிப்பு முறைகளை கையாளுவதுடன் பண்ணை உயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: செம்மறி ஆடுகள், வெள்ளாடுகளுக்கு குடல்புழு நீக்கம் செய்ய ஏற்ற தருணம் நிலவுகிறது. எனவே, குடல்புழுக்களின் வகைகளையும், முட்டைகளையும் அறிந்து மருந்து கொடுப்பது சிறந்ததாகும். அதிகாலையில் வெறும் வயிற்றுடன் உள்ள ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம் செய்ய வேண்டும். தொடர்ந்து, ஒரே மருந்தைக் கொடுக்காமல் மாற்றிக் கொடுப்பது அவசியம். சீதோக்ஷ்ண நிலை மாறிவருவதால் நாட்டுக் கோழிகளிடையே வெள்ளைக் கழிச்சலுக்கான எப் 1 (கண், நாசித்துவாரம் வழியாக), லசோட்டா (குடிநீர் வழியாக), ஆர்.டி.வி.கே (தோலுக்கடியில் ஊசிமூலம்) ஆகிய தடுப்பூசிகளை 7, 28 மற்றும் 56ஆம் நாள்களில் முறையாக வழங்கிட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சின்னமட்டாரப்பள்ளியில் கால்நடை மருத்துவ முகாம்**

**கிருஷ்ணகிரி,**

கிருஷ்ணகிரி மாவட்டம், சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சிக்கு உள்பட்ட பசவன்னகோவில் கிராமத்தில் கால்நடை மருத்துவ முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு மருத்துவர் பெருமாள், வேளாண்மை அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தராஜ் ஆகியோர் தலைமை வகித்தனர். சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் நாகராணி விஸ்வநாதன், முன்னாள் வேளாண்மை இணை இயக்குநர் வி.குப்புசாமி, கால்நடைத் துறை மருத்துவர்கள் ரமேஷ், வேலன் உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றனர்.

முகாமில் கால்நடைகளுக்கு குடல்புழு நீக்கம், சினை பரிசோதனை, பருவத்துக்கு வந்த கால்நடைகளுக்கு சினை ஊசி போடுதல், கழிச்சல், அஜீரணக் கோளாறு ஏற்பட்டுள்ள கால்நடைகள் என 100-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டன.

**கரும்பு விவசாயிகளுக்குரிய தொகையை வழங்கவில்லை எனில் கடுமையான நடவடிக்கை**

**திருச்சி,**

கரும்பு விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்கவில்லை எனில் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலை மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்தார் மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஆட்சியர் ஜெயசிறி முரளிதரனிடம் பல்வேறு விவசாய சங்கப் பிரநிதிகள், சர்க்கரை ஆலைகள் அரசு நிர்ணயித்து அறிவித்த ஆதார விலைத் தொகையைத் தர மறுப்பதாகவும், இதுகுறித்து ஆலை நிர்வாகத்திடம் கேட்டால் உரிய நடவடிக்கை இல்லை என்றும் பலரும் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து காட்டூரிலுள்ள கோத்தாரி சர்க்கரை ஆலை நிர்வாகத்தின் சார்பில் கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரி கூறியது:

தற்போது 1 கிலோ சர்க்கரையைத் தயாரிப்பதற்கு ரூ.5 வரை செலவாகிறது. 1 குவிண்டால் சர்க்கரை தயாரிக்க ரூ.3300 வரை செலவாகிறது. ஆனால் தற்போது சர்க்கரை விற்பனையும் குறைந்து வருகிறது. சர்க்கரை ஆலைகள் தற்போது செயல்படுவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. எனவே அரசு எங்களுக்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

கோத்தாரி ஆலை அதிகாரியின் பதிலை ஏற்க மறுத்த ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன், விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பிற்கான ஆதார விலையை டன்னுக்கு ரூ.2550 மற்றும் வாடகைக் கட்டணம் ரூ.100 என்று நிர்ணயித்திருக்கிறது. ஆனால் இந்த விலையை வழங்க முடியாது என்று கூறுவது ஏற்றத்தக்கதல்ல. லாபம் வந்த போது அரசுக்குத் தொகையைநீங்கள் தரவில்லை, தற்போது சர்க்கரைத் தொழிலில் பிரச்னை என்றால் அதை சமாளித்துக் கொள்ள வேண்டியது உங்களது பொறுப்பு. விவசாயிகளிடம் கொள்முதல் செய்த கரும்புக்குரிய தொகையை வழங்காமல் காலம்தாழ்த்துவது ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏற்கெனவே 2 மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுவிட்டது. உரிய நேரத்திற்குள் வழங்கவில்லை எனில் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் ஆலையின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, சீல் வைக்கப்படும் என எச்சரித்தார் மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன்.

## கரூர் மாவட்டத்தில் 1.24 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் 1.24 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டு, சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வர் வேளாண்துறையில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி உணவு தானிய உற்பத்தியை 2 மடங்காகவும், விவசாயிகளின் வருமானத்தை தற்போதைய நிலையில் இருந்து 2 அல்லது 3 மடங்காகவும் அதிகரிக்க பல சிறப்புத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார்.

இதன்மூலம் 2013-14 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டத்தில் உணவு தாணிய உற்பத்தி 1.21 லட்சம் மெட்ரிக் டன் இலக்கில் இருந்து 1.24 லட்சம் மெட்ரிக் டன்னாக சாதனை படைத்துள்ளது.

நடப்பு காரீப் பருவத்துக்கு தேவைப்படும் நெல் விதைகள் 190 மெட்ரிக் டன், சிறுதானிய விதைகள் 3 மெட்ரிக் டன், பயறு வகை விதைகள் 14 மெட்ரிக் டன், எண்ணெய் வித்து விதைகள் 20 மெட்ரிக் டன் அளவுக்கு அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பில் உள்ளது. இவற்றை மானிய விலையில் பெற்றுக்கொள்ளலாம். முதல்வரின் சிறப்புத் திட்டமான மழைநீரை சேமிக்க பண்ணைக்குட்டைகள், இதுவரை மாவட்டத்தில் 388 விவசாயிகளுக்கு இலவசமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பண்ணைக்குட்டைகளில் மழைநீர் தேங்குவதால் விவசாயிகள் தோட்டத்தில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் உயரும். மாவட்டத்தில் இதுவரை பண்ணைக்குட்டை அமைக்காத விவசாயிகள் தங்களது பெயரை வேளாண்மைத்துறை களப்பணியாளர்களிடம் பதிவு செய்து பயனடையலாம் என்று ஆட்சியர் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தில் தஞ்சாவூர் சேர்ப்பு

**தஞ்சாவூர்,**

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டம் சேர்க்கப்பட்டுள்ளது என்றார் வேளாண் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) கோ. ராமதாஸ்.

தஞ்சாவூர் பனகல் கட்டடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாவட்ட ஊராட்சிக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் திருவாரூர், நாகை, சிவகங்கை உள்பட 5 மாவட்டங்கள் இருந்தன. இப்போது, இத்திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் அரசால் கண்டுபிடிக்கப்பட்டு 10

ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்ட நெல் விதைகளுக்கு கிலோவுக்கு ரூ. 10 மானியம் வழங்கப்படும். இதன்படி, குறுவை பருவத்துக்கு ஏற்ற ஆடுதுறை 47, ஆடுதுறை 48, கோ.ஆர். 51, கோ.ஆர்.ஹெச். 3 ஆகிய ரகங்களுக்கு மானியம் கிடைக்கும்.

விவசாயிகள் மண்வள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அட்டை அரசின் திட்டங்கள் கிடைக்க உதவியாக இருக்கும். தமிழகத்தில் கடந்த ஆண்டு 103 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. இதில், தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாமிடம் பெற்றது. நிகழாண்டில் 145 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் தங்களது கிராமங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தி இலக்கை அடைய ஒத்துழைக்க வேண்டும் என்றார் ராமதாஸ். மாவட்ட ஊராட்சி செயலர் செல்லக்கண்ணு பேசியது:

நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடிக்க வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2011-12 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளே நிலுவையில் உள்ளன. இவற்றை ஒரு வாரத்துக்குள் முடிக்க தொடர்புடைய அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## <u>கல்லாற்றின்குறுக்கேதடுப்பணைகள் கட்ட கோரிக்கை</u>

**பெரம்பலூர்,**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கல்லாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பூ. விசுவநாதன் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அகமதுவிடம் அளித்த மனு:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டத்தில் உள்ள அரும்பாவூர், பூலாம்பாடி, தொண்டமாந்துறை, வெங்கலம், அன்னமங்கலம், எசனை, வெங்கனூர், பில்லாங்குளம் ஆகிய ஏரிகளில் வரத்து வாய்க்கால்கள் மற்றும்

அருகிலுள்ள குளம், குட்டைகளை தூர்வாரி சீரமைக்க வேண்டும். மலையாளப்பட்டி சின்னமுட்டுலு பகுதியில், பச்சைமலையிலிருந்து உற்பத்தியாகி வரும் கல்லாற்றின் குறுக்கே வெண்பாவூர், கிருஷ்ணாபுரம், வெங்கலம், பாண்டகப்பாடி ஆகிய கிராமங்களில் தடுப்பணைகள் கட்ட மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் தடுப்பணைகள் கட்டினால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதற்கும், கிணறுகளில் நீரூற்று பெருகி விவசாயத்துக்கும் பெரிதும் உதவியாக இருக்கும்.

எனவே, மழைக்காலம் தொடங்குவதற்கு முன் கல்லாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## குமரி கடலோரப் பகுதியில் கதிரியக்கம் அளவீடு செய்யப்படுகிறது

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதிகளில் கதிரியக்க அளவீட்டை இந்திய அரிய மணல் ஆலை நிறுவனம் ஆய்வு செய்து வருவதாக மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தெரிவித்தார்.

குமரி மாவட்ட மீனவர் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில், 82 மனுக்கள் பெறப்பட்டன. கடல்சார் கல்வி பயிலும் மீனவ மாணவர்களுக்கு அரசால் வழங்கப்படும் நிதியுதவித் திட்டத்தின்கீழ் முட்டம், ஓடைத் தெருவைச் சேர்ந்த மாணவர் சகாய ஆல்பிரட் அபிசேக் மற்றும் இனயம் சின்னத்துறை சேர்ந்த மாணவர் அருள் ஜெனிஸ்மோன் ஆகியோருக்கு தலா ரூ. 50 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ. 1 லட்சத்துக்கான காசோலையை ஆட்சியர் வழங்கிப் பேசியது:

உள்நாட்டு மீனவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்கு மீன்துறை இயக்குநர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மீன்வளக் கல்லூரியில் மீனவ மாணவர்களுக்கு ஏற்கனவே இருந்த 7 சதவீத இடஒதுக்கீட்டை மீண்டும் வழங்குவது தொடர்பான மனுக்கள் மீன்துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

பொதுத்துறை வங்கிகளின் மூலம் மீனவர்களுக்கு 7 சதவீத வட்டியில் அரசு மானியத்துடன் மீனவர்கள் பயன்பெறும் வகையில் விவசாயக் கடன் அளிக்கப்பட்டு வருகிறது.

கடலோரப் பகுதிகளில் கதிரியக்க பாதிப்புகளால் ஏற்படும் புற்றுநோய் மற்றும் கதிரியக்க அளவீட்டை இந்திய அரிய மணல் ஆலை நிறுவனம் ஆய்வு செய்து வருகிறது.

சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதார திட்டப் பணிகள், கடலோரக் கிராமங்களில் உள்ள அனைத்துப் பகுதியிலுள்ள சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

கூட்டத்தில், மீன்வளத் துறை துணை இயக்குநர் கணேசன், உதவி இயக்குநர் ரூபர்ட் ஜோதி, பி.ஆர்.ஒ. இரா. அண்ணா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் நசீர்பாபு, உதவி செயற்பொறியாளர்கள் நெடுமாறன், ஜார்ஜ் பெர்னால்டு, பனிமயம் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## நெல்லையில் ஓர் மழைக்காலம்: 2013-க்கு நவம்பர், 2014-க்கு மே

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்தாண்டும், நிகழாண்டு இதுவரையும் பெறப்பட்ட மழையளவுகளில் 2013 நவம்பர், 2014-ல் மே மாதங்களில் மட்டுமே அதிகப்படியான மழை பெறப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தின் சராசரி மழையளவு 814.80 மி.மீ. ஆகும். 2013ஆம் ஆண்டு 913.67 மி.மீ. மழை பெறப்பட்டது. இது இயல்பான மழையளவை விட 12 சதவீதம் கூடுதலாகும். நிகழாண்டு இதுவரை 374.8 மி.மீ. மழை பெறப்பட்டுள்ளது.

கடந்தாண்டு நவம்பர் மாதம் அதிகபட்சமாக 256.66 மி.மீ. மழை பெய்தது. இதேபோல, கடந்தாண்டு மார்ச் மாதம் 142.14 மி.மீ., ஜூன் மாதம் 103.92 மி.மீ மழை பெய்தது. நிகழாண்டு பிப்ரவரியில் குறைந்தபட்சமாக 9.24 மி.மீ. மழை பெய்தது. மே மாதம் 207.78 மி.மீ. மழை பெய்து மாவட்டத்தை குளிரச் செய்துள்ளது. இது இயல்பான மழையளவைவிட 71 சதவீதம் கூடுதலாகும்.

மாவட்டத்தில் உள்ள பாபநாசம், சேர்வலார், மணிமுத்தாறு, கடனா நதி, ராமநதி, கருப்பாநதி, குண்டாறு, அடவிநயினார், வடக்குப்பச்சையாறு, கொடுமுடியாறு, நம்பியாறு ஆகியவற்றில் சராசரியாக 20 சதவீதம் நீர் இருப்பு உள்ளது.

கிணறுகளில் சராசரியாக 3 முதல் 6 மணி நேரம் வரை பாசனம் மேற்கொள்ளும் வகையில் தண்ணீர் உள்ளது.

## தாமிரவருணி நதி மாசுபடுவதைத் தடுக்க கண்காணிப்புக் குழு

**திருநெல்வேலி,**

தாமிரவருணி நதி மாசுபடுவதைத் தடுக்க அரசு அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்த வேண்டுமென விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் மு.கருணாகரன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சௌந்தரராஜன், துணை இயக்குநர் அருள்மோகன், துணை ஆட்சியர்(பயிற்சி) வீரபுத்திரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இக் கூட்டத்தில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

பி.பெரும்படையார்: ராதாபுரம் வட்டம், வள்ளியூர் பெரிய குளத்துக்கு கொடுமுடியாறு அணையிலிருந்து விவசாயத்துக்கு தண்ணீர் வருவது வழக்கம். கடந்த 5 ஆண்டுகளாக அணையில் திறக்கும் தண்ணீர் முறையாக குளத்துக்கு வந்து சேருவதில்லை. வழியில் பல்வேறு ஆக்கிரமிப்புகளாலும், வள்ளியூரான் கால்வாயை குறுக்கே மறித்து வேறொரு குளத்துக்கு சம்பந்தமில்லாத நபர்கள் தண்ணீரை கொண்டு செல்வதாக தெரிகிறது. எனவே, இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிகாரிகள்: இதுதொடர்பாக விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

எம்.எஸ்.மாடசாமி: மானூர், ஆலங்குளம், மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில், குருவிகுளம், கடையநல்லூர் கீழ்பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமென மனு கொடுக்கப்பட்டது. அதன்படி மாவட்டத்தில் உள்ள 6 ஒன்றியங்களிலும் கிராம நிர்வாக அதிகாரிகள்,

மக்காசோளம், தென்னை மரம், நெல் ஆகிய பயிர்கள் கருகிப்போனதை கணக்கெடுத்தனர்.

இருப்பினும் பல மாதங்களாகியும் இதுவரை நிவாரணத்தொகை விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. எனவே, நிவாரணத் தொகை விரைவாக கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள்: இதுதொடர்பாக அரசுக்கு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆர்.கசமுத்து: தாமிரவருணி நதியின் கரையோரத்தில் விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் நகராட்சிகள், திருநெல்வேலி மாநகராட்சி உள்ளது. இப் பகுதியின் கழிவுநீர் முழுமையும் தாமிரவருணியில் பாய்ந்து அசுத்தப்படுத்துகிறது. எனவே, இந்தப் பகுதிகளில் தேவையான கழிப்பறைகளை ஏற்படுத்தி, அதை பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மருத்துவமனை கழிவுகள் கால்வாய்களில் கலப்பதைத் தடுக்க வேண்டும். தாமிரவருணியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கலாம். பாபநாசம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, சேரன்மகாதேவி போன்ற பகுதிகளில் விழிப்புணர்வுப் பேரணி நடத்தலாம். நதி மாசுபடுவதைத்தடுக்க அரசு அதிகாரிகள் அடங்கிய கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்தலாம். கண்டிப்பு, கண்காணிப்பு, விழிப்புணர்வு இருந்தால் மட்டுமே தாமிரவருணி நதி மாசுபடுவதைத் தடுக்க முடியும்.

அதிகாரிகள்: இதுகுறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

வடகரை விவசாயிகள்: கடையநல்லூர் வனச்சரகத்துக்குள்பட்ட பகுதிகளில் வனப்பகுதியோரம் உள்ள விளைநிலங்களில் வனவிலங்குகள் புகுந்து பயிர்களைச் சேதப்படுத்துகின்றன.

ஆட்சியர் மு.கருணாகரன்: வனத்துறையினரின் உதவியுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளில் பயிர்ச்சேதத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ்.டி.ஷேக்மைதீன்: வடகரை கீழ்பிடாகை, அச்சன்புதூர் கிராமங்களின் விவசாய நிலங்கள் வனத்தை ஒட்டியே உள்ளன. இப்பகுதியில் சோலார் மின்வேலிகள்

சரியாகப் பராமரிக்கப்படாததால் வனவிலங்குகளால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, நமக்குநாமே திட்டத்தில் சோலார் மின்வேலி அமைக்கவும், வனவிலங்குகள் தண்ணீர் குடிக்க ஏதுவாக வனப்பகுதிக்குள் குட்டைகள் அமைக்கவும் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஸ்.எஸ்.மருதையா: சங்கரன்கோவில் வட்டம், ஆட்கொண்டார்குளம் பகுதியில் சுமார் 1000 ஏக்கர் நன்செய், புன்செய் நிலங்கள் உள்ளன. ஆனால், விவசாய பொருள்களை அறுவடை செய்து உலர வைப்பதற்கு களம் இல்லை. எனவே, ஆட்கொண்டார்குளத்தில் உலர்களம் அமைக்கவும், கால்வாய்கள், ஓடைமதகுகளைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள்: சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

செ.வீறுத்தேவர்: சிவகிரி வட்டம், தென்மலை பகுதியில் பாசனவசதி குறைந்து வருதால் வேளாண்மையில் போதிய சாகுபடி கிடைப்பதில்லை. எனவே, ஆடு மற்றும் கறவை மாடுகள் தொட்டில் அமைத்து அதன் கழிவுகளில் இருந்து புதிய தொழில்நுட்பத்தில் இயற்கை உரம் தயாரித்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். எனவே, எங்களது அட்மா விவசாய குழுவுக்கு ஆடு-கறவை மாடுகளை மானிய விலையில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மக்காச் சோளம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்

**சிதம்பரம்,**

காவிரி டெல்டா கடை, மடை பகுதியான காட்டுமன்னார்கோவில் பகுதியில் வறட்சி, வெள்ளம் என மாறி, மாறி விவசாயிகளை அவதிக்குள்ளாக்கி வருகின்றன. நெல் பயிரிட்டு நஷ்டத்தையே சந்தித்து வந்த விவசாயிகள், மாற்றுப் பயிராக கடந்த 3 ஆண்டுகளாக மக்காச் சோளம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் செலவு: மக்காச் சோளம் நிலத்தில் 1 அடிக்கு, 1 அடி வீதம் இடைவெளி விட்டு விதை விட வேண்டும். 2 அடி இடைவெளியில் பாத்தி அமைத்து விதைக்கப்படுகிறது. 120 நாள் பயிரான மக்காச் சோளம் பயிரிட ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம்தான் செலவாகிறது. ஆனால், ரூ.45 ஆயிரம் வரை

தொகை கிடைப்பதால், ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் லாபம் கிடைக்கிறது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறைந்த நீர், குறைந்த செலவு: மூன்று மாதத்தில் அறுவை செய்யப்படுவதால், ஆழ்துளைக் கிணறு வைத்திருக்கும் பெரும்பாலான விவசாயிகள் மக்காச் சோளம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மக்காச் சோளம் பயிரிட்ட நிலங்களுக்கு 4 நாள்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். குறைந்த நீரும், குறைந்த பராமரிப்புச் செலவும் ஆவதால் விவசாயிகள் தங்களது நன்செய் நிலங்களில் மக்காச் சோளம் பயிரிட்டு வருகின்றனர்.

வியாபாரிகள் நேரடி கொள்முதல்: சாகுபடி செய்த மக்காச் சோளத்தை வியாபாரிகள் கிராமங்களுக்கு நேரடியாக வந்து விவசாயிகளிடம் வாங்கிச் செல்கின்றனர். தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கோழிப்பண்ணைகள் உருவாகி வருவதால், தீவனத்திற்காக மக்காச் சோளத்தை வியாபாரிகள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சென்னையில் மீண்டும் 40 டிகிரி செல்சியஸ் வெப்பம்

சென்னை: அக்னி நட்சத்திர முடிவில் குறைந்த வெப்பநிலை, சென்னை யில் மீண்டும் உயரத் துவங்கி உள்ளது. நேற்று பகலில், சென்னை மீனம்பாக்கத்தில் வெப்பநிலை, மீண்டும், 40 டிகிரி செல்சியசை தொட்டது.

தமிழகத்தில் அக்னி நட்சத்திர காலம், கடந்த, 28ம் தேதி முடிவுக்கு வந்தது. முன்னதாக, மே, 16ம் தேதி முதலே, சென்னை உள்ளிட்ட, தமிழகத்தின் வட மாவட்டங்களில் வெப்பநிலை, 42 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்தது. தொடர்ந்து, அக்னி நட்சத்திர முடிவில், வெப்பநிலை, குறைந்தது. எனினும், நேற்று மீண்டும் வெப்பநிலை உயர்வை சந்தித்தது.

அனல் காற்று:

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் அதிகபட்சமாக, 41டிகிரி செல்சியஸ் (105.8 டிகிரி பாரன்ஹீட்) வெப்பம் பதிவாகியது. அடுத்ததாக, சென்னை மீனம்பாக்கத்தில், 39.8 டிகிரி செல்சியஸ், நுங்கம்பாக்கத்தில், 37.6 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவாகியது. இதன் காரணமாக, அனல் காற்றின் தாக்கம் அதிகரித்தது. இது தவிர, வேலூர், திருச்சி உள்ளிட்ட பகுதிகளிலும் வெப்பநிலை அதிகரித்து வருகிறது. பல இடங்களில், மழையும் பதிவாகியது. இன்னும் சில தினங்களுக்கு, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை நீடிக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் மேற்கு பருவ மழை:

தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழையானது, கன்னியாகுமரி, நெல்லை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் மழையை தரும். வழக்கமாக, ஜூன், முதல் தேதி, கேரளாவில் மழை துவங்கும்; படிப்படியாக மற்ற பகுதிகளுக்கு பரவும். இந்தாண்டு, ஜூன், 2ம் தேதி தென்மேற்கு பருவமழை துவங்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. வெப்பச்சலனத்தின் காரணமாக, தமிழகத்தில் கிடைத்த மழை கூட, கேரளாவில் கிடைக்கவில்லை. இருப்பினும் அடுத்த சில தினங்களில், கேரளாவில் ஆங்காங்கே, கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## நாளை அணைகள் திறப்பு

**சென்னை**: கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை பெருஞ்சாணி மறறும் சித்தூர் அணைகளில் இருந்து, ஜூன், 1ம் தேதி முதல், பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும்படி, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை பெருஞ்சாணி, சித்தூர் - ஒன்று மற்றும் சித்தூர் - இரண்டு அணைகளில் இருந்து, கோதையாறு மற்றும் பட்ட ணங்கால் பாசனத்திற்காக, தண்ணீர் திறந்து விடும்படி, விவசாயிகள், முதல்வருக்கு கோரிக்கை விடுத்தனர். அதை ஏற்று, அந்த அணைகளில் இருந்து, நாளை முதல் தண்ணீர் திறந்து விட, முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதனால், கன்னியாகுமரி மாவட்டத்தில்,

கோதையாறு மற்றும் பட்டணங்காலில் உள்ள, 79 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும். அதேபோல், தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கு இருபோக ஆயக்கட்டு பகுதிகளுக்கு, முதல் போக சாகுபடிக்காக, பெரியாறு அணையில் இருந்து, நாளை முதல், தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்பட்டு உள்ளது. இதனால், தேனி, உத்தமபாளையம், போடி நாயக்கனூர் வட்டங்களில், 14,707 ஏக்கர் பாசன வசதி பெறும்.

## வறட்சி பாதிப்பு கணக்கெடுப்பு இரண்டாவது முறையாக துவக்கம்

**திண்டுக்கல்**: மத்திய அரசிடமிருந்து முழுமையான நிதி பெற முடியும் என்ற நம்பிக்கையால், வறட்சி பாதிப்பு குறித்து இரண்டாவது முறையாக கணக்கெடுக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடுமையான வறட்சி காரணமாக விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுக்கும் பணி, ஜனவரியில் துவங்கி பிப்ரவரியில் முடிக்கப்பட்டது. நிவாரணம் வழங்குவது தொடர்பான பரிசீலனை, லோக்சபா தேர்தலை முன்னிட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது மத்தியில் புதிய அரசு பதவி ஏற்றுள்ளதால் வறட்சி நிவாரணத்திற்கான தொகையை முழுமையாக பெறமுடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால், இரண்டாவது முறையாக வறட்சி குறித்து துல்லியமான கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தென்னை உட்பட மா, புளி, நெல், பயறு, காய்கறி என, அனைத்தையும் வறட்சி பட்டியலில் சேர்க்க வருவாய் ஆய்வாளர்களிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிராம நிர்வாக அலுவலர்கள், தங்கள் பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளையும் நேரில் சந்தித்து வறட்சி தொடர்பான தகவல்களை முழுமையாக சேகரித்து, ஜூன் மாத இறுதிக்குள் மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## எச்சரிக்கை ! : தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு கலெக்டர்... : நிலுவை வழங்காவிடில் சொத்து பறிமுதல்




**கடலூர்**: கடலூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர் குறைய காரணமாக இருந்து வரும் என்.எல்.சி., நிர்வாகம், கடலூர் மாவட்டத்தை தத்தெடுத்து, நிலத்தடி நீரை பாதுகாக்க ஆண்டுக்கு 50 கோடி செலவிடவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம், கடலூரில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் நடந்தது. கலெக்டர் கிர்லோஷ்குமார் தலைமை தாங்கினார்.

கலெக்டர்: கரும்பு விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகை வழங்கப்பட்டதா. அம்பிகா, சர்க்கரை ஆலை அதிகாரி: மே 31ம் தேதிக்குள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை 30 கோடி ரூபாயில் 20 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இன்று (நேற்று) 3 கோடி ரூபாய் வழங்கப்படவுள்ளது. ஜூன் 5ம் தேதிக்குள் 25 கோடியும், 30ம் தேதிக்குள் 20 கோடி ரூபாயும் வழங்கப்படும்.

கலெக்டர்: கரும்பு நிலலுவைத் தொகை குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கா விட்டால் வருவாய் துறை வசூல் சட்டத்தின்படி சம்பந்தப்பட்ட ஆலையின் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும். மேலும் இதற்கான நோட்டீசை வழங்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வெங்கடேசன்: என்.எல்.சி., நிறுவனம் தொடர்ந்து தண்ணீர் உறிஞ்சப்படுவதால், விருத்தாசலம் மேற்கு பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளது. என்.எல்.சி.,யால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, என்.எல்.சி.,

செலவில் குளங்களை தூர்வாரவும், செக்டேம், பெட் டேம்களை கட்ட நடவடிக்கை எடுத்து கிராமங்களில் நிலத்தடி நீரை பாதுகாக்க வேண்டும்.

மாதவன்: எம்.ஆர்.கே., சர்க்கரை ஆலையில் விவசாயிகளுக்கு தரவேண்டிய 18 கோடி ரூபாய் பெற்றுத்தர வேண்டும்.

கான்சாகிப் வாய்க்கால் தூரவாரப்பட வேண்டும். புவனகிரில் புதிய பாலம் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ராமலிங்கம்: குறிஞ்சிப்பாடி பகுதி விவசாயிகள் மண் ஆய்வு செய்வதற்கு கடலூர் அல்லது விருத்தாசலம் செல்ல வேண்டியுள்ளதால், குறிஞ்சிப்பாடி பகுதியில் மண் ஆய்வுக்கூடம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோதண்டராமன்: முதல்வர் ஜெயலலிதா வரும் 1ம் தேதி முதல் மின்வெட்டு இருக்காது என அறிவித்துள்ளார். அதன்படி விவசாயிகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்தில் ஏதாவது மாற்றம் உண்டா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

ரவீந்திரன்: வீராணம் ஏரியை தூர்வார முதல்வர் ஜெயலலிதா 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து அறிவித்திருந்தார்.

அதன்படி வீராரணம் ஏரி எப்போது தூர்வரப்படும் என தெரிவித்தால் விவசாயிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும். என்.எல்.சி., ஆண்டுக்கு 1,536 கோடி ரூபாய் வருவாய் ஈட்டுகிறது.

இதில் மாவட்டத்திற்கு ராயல்டியாக 1.34 கோடி ரூபாய் வழங்குகிறது. நாள் ஒன்றுக்கு என்.எல்.சி., 72 ஆயிரம் கிலோ லிட்டர் தண்ணீரை நிலத்தடியிலிருந்து உறிஞ்சுகிறது. இந்த நீரைக் கொண்டு வெறும் 22 ஆயிரம் ஏக்கர் மட்டுமே பயன் பெற முடிகிறது.

எனவே, எல்.என்.சி., நிர்வாகம் கடலூர் மாவட்டத்தை தத்தெடுத்துக் கொண்டு ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும்.

மாவட்டத்தில் நீர் ஆதாரங்களை மேம்படுத்தி, செயற்கை முறை நீர் செறியூட்டும் ஆழ்துளை குழாய்களை அமைத்து, மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை மேம்படுத்த வேண்டும்.

## நாமக்கல் மாவட்ட கலெக்டர் தகவல் நிலத்தடி நீர்மட்டம் உயர்த்த 1,106 பண்ணை குட்டை

**நாமக்கல்**: "மழை நீரை சேகரிக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், 1,106 பண்ணை குட்டைகள் முடிக்கப்பட்டுள்ளது' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி பேசினார்.

நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. நாமக்கல் கலெக்டர் தட்சிண பேசியதாவது: நாமக்கல் மாவட்டத்தில் சராசரி மழை அளவு, 716.5 மி.மீ., கடந்த இரண்டு ஆண்டாக, சராசரி மழையளவை காட்டிலும் குறைவாகவே பெய்துள்ளது. நடப்பா ண்டு மே இறுதி வரை, இயல்பு மழை அளவு, 164 மி.மீ., ஆனால், 102.8 மி.மீ., அளவே பெய்துள்ளது. மானாவாரி பயிர்களான நிலக்கடலை, சோளம், பாசிப்பயறு விதைப்பு நடந்து வருகிறது. தமிழக முதல்வரின் உணவு தானிய இயக்கத் திட்டத்தின் கீழ், கடந்தாண்டு நெல், சிறுதானியம், பயறுவகை பரப்பு இலக்கு, 1.15 லட்சம் ஹெக்டேர். ஆனால், 1.20 லட்சம் ஹெக்டேர் இலக்கை எட்டி சாதனை படைக்கப்பட்டுள்ளது.தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய தொழில் நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, தீவிர பயறு உற்பத்தி திட்டம், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம், துவரை நாற்று விட்டு நடும் முறை மற்றும் சொட்டு நீர் பாசனம், துல்லிய பண்ணை திட்டம், தேசிய நுண்ணீர் பாசனம் போன்ற திட்டங்கள் விவசாயிகளால் அதிகளவில் இம்மாவட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டு, இரண்டு லட்சத்து, 34 ஆயிரத்து, 802 மண் மாதிரி சேகரிக்கப்பட்டது. ஒரு லட்சத்து, 18 ஆயிரத்து, 734 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டது. நடப்பாண்டு, 37 ஆயிரத்து, 500 மண் மாதிரி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சிறு, குறு, ஆதிதிராவிட விவசாயிகள் தங்களது விளை நிலங்களில், பண்ணை குட்டைகள் அமைத்துக் கொள்ளலாம். அதன்மூலம், மழைநீர் சேகரிக்கப்படுவதால், அருகில் உள்ள கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் உயரவாய்ப்பு உள்ளது. மொத்தம், 1,932 பண்ணை குட்டைகளில், 1,315 பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1,106 பண்ணை குட்டைகள் பணி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

## கரும்புக்கு அரசு அறிவித்த விலை வழங்க ஆலைகளுக்கு கலெக்டர் உத்தரவு

**திருச்சி**: ""தமிழக அரசு அறிவித்தபடி, கரும்பு விவசாயிகளுக்குரிய தொகையை, ஆலை நிர்வாகங்கள் வழங்க வேண்டும்," என கலெக்டர் ஜெயஸ்ரீ உத்தரவிட்டார்.

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடந்தது. கூட்டத்தில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மாவட்ட செயலாளர் சூரியன் பேசுகையில், காவிரி பாசன பகுதிகளான தொட்டியம், முசிறி, மண்ணச்சநல்லூர், லால்குடி, ஸ்ரீரங்கம், உப்பிலியபுரம், துறையூர், மணப்பாறை, மற்றும் கரூர் மாவட்டம், குளித்தலை ஆகிய பகுதியில், ஒரு லட்சம் ஏக்கரில், விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்கின்றனர்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் கரும்பினை, கோத்தாரி, பேரி ஆகிய சர்க்கரை ஆலைகளுக்கு வழங்க அனுமதித்துள்ளனர். விவசாயிகளிடம் கரும்பினை பெற்ற ஆலை நிர்வாகம், கரும்பிற்கான பணத்தை வழங்கவில்லை.

விவசாயிகள் வாங்கிய பயிர்கடனை திரும்பக் கேட்டு தேசிய வங்கிகள், கூட்டுறவு வங்கிகளும் நோட்டீஸ் அனுப்பியுள்ளன, என்றார். மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ: தமிழக அரசு கரும்பிற்கான விலையாக, 2,550 ரூபாய் நிர்ணயித்துள்ளது.

ஆலை நிர்வாகம், 300 ரூபாய் குறைத்து வழங்கியது தவறு. அரசாணைப்படி வழங்காமல், ஒரு ரூபாய் குறைந்தாலும் சட்டப்படி குற்றம்.

ஆலை நிர்வாகம் லாபமடைந்த போது, விவசாயிகளுக்கோ, அரசுக்கோ கூடுதல் பணம் வழங்கினீர்களா? அப்படி இருக்க, நஷ்டம் ஏற்படும் போது, விவசாயிகளுக்கு குறைத்து தருவதும், அரசு மானியம் வழங்க வேண்டும் என்பதும் சரியல்ல. அரசு அறிவித்தபடி, கரும்பு டன் ஒன்றுக்கு, 2,550 ரூபாய் வழங்க வேண்டும்.

ஏற்கனவே பணம் பெற்ற விவசாயிகளுக்கு, மீதித்தொகை, 300 ரூபாயை உடனடியாக வழங்க வேண்டும். இரண்டு கட்ட பேச்சுவார்த்தைக்கு பின்னும் இழுத்தடிப்பு செய்தால், "ரெவின்யூ ரெக்கவரி' சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

கலெக்டரின் அதிரடி உத்தரவால், கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## ஒரே நாளில் 100 டன் மீன்கள் சிக்கியதால் மீனவர்கள் "குஷி'

**முதுநகர்**: மீன்பிடி தடை காலம் முடிந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் வலைகளில் 100 டன் அளவிற்கு மத்தி மீன்கள் சிக்கின. வங்கக்கடலில் ஏப்ரல் 15ம் தேதி முதல் மே 29 தேதி வரை 45 நாட்கள் மீன்கள் இன விருத்திக்காக ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்க அரசு தடைவிதித்தது. இந்த ஆண்டு மீன் பிடி தடை காலம் ஏப்ரல் 15ம் தேதி துவங்கியதைத் தொடர்ந்து மீனவர்கள் ஆழ்கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்வதை தவிர்த்து வந்தனர். சிறிய அளவிலான மீன்பிடி படகுகள் மட்டுமே குறிப்பிட்ட நாட்டிக்கல் மைல் எல்லைக்குட்பட்டு மீன் பிடித்து வந்தனர். மீன்பிடி தடைக்காலம் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் நேற்று காலை முதலே மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். ஒன்றரை மாதங்களுக்கு பிறகு நேற்று கடலுக்குச் சென்ற மீனவர்கள் வலைகளில் அதிகளவு மத்தி மீன்கள் சிக்கின. நேற்று மட்டும் கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் 100 டன் அளவிற்கு மத்தி மீன் வரத்து இருந்தது. இம்மீன்கள் (45 கிலோ பாக்ஸ்) 1,000 ரூபாய்க்கு ஏலம் போனது.

## எள் சாகுபடி பணிகள் தீவிரம்

**கச்சிராயபாளையம்**: கோடை மழை பெய்ததை தொடர்ந்து விவசாயிகள் 2 ம் போக எள் சாகுபடி பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். மாவட்டத்தில் இந்த ஆண்டு நிலவிய வறட்சியின் காரணமாக நீர்மட்டம் குறைந்ததால் விவசாயிகள் மானா வாரி பயிர்களான கம்பு, சோளம், கேழ்வரகு, எள் சாகுபடி செய்தனர். கடந்த மாதம் அறுவடை பணிகள் முடிந்தது. தற்போது கள்ளக்குறிச்சி பகுதியில் கோடை மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் 2 ம் போக எள் சாகுபடி பணிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

## தீவிர சிறுதானிய சாகுபடி விவசாயிகள் கருத்தரங்கு

**விழுப்புரம்**: தீவிர சிறுதானிய சாகுபடி மூலம் ஊட்டசத்து பாதுகாப்பு ஏற்படுத்துதல் குறித்த விவசாயிகள் கருத்தரங்கு, விழுப்புரத்தில் நடந்தது. விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில், தேசிய வேளாண்மை வளர்ச்சித்

திட்டத்தின்படி, தீவிர சிறுதானிய சாகுபடி மூலம் ஊட்டசத்து பாதுகாப்பு ஏற்படுத்துதல் குறித்த விவசாயிகள் கருத்தரங்கு நடந்தது. திண்டிவனம் உழவர் பயிற்சி நிலையத்தின், வேளாண்மை துணை இயக்குனர் ராஜாமணி தலைமை தாங்கி, கருத்தரங்கை துவக்கி வைத்தார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் வேதவல்லி வரவேற்றார்.

கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) ராஜசேகரன், விழுப்புரம் வேளாண்மை துணை இயக்குனர் ரத்தினசபாபதி, திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய <உதவி பேராசிரியர்கள் செந் தமிழ், தமிழ்ச்செல்வி ஆகியோர், சிறுதானிய சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு விளக்கினர்.

## கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

**உளுந்தூர்பேட்டை**: உளுந்தூர்பேட்டை தாலுகா களமருதூர் கால்நடை மருந்தகத்திற்குட்பட்ட ப.கிள்ளனூர், டி.ஒரத்தூர் ஊராட்சிகளில் சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. கால்நடை உதவி மருத்துவர்கள் டாக்டர்கள் சுரேஷ்குமார், தமிழரசு, பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு 724 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாம் பணிகளை திருக்கோவிலூர் கோட்ட உதவி இயக்குநர் டாக்டர் குபேந்திரன் பார்வையிட்டார். பசு கன்றுகளின் ஆரோக்கிய வளர்ச்சிக்காக தாது உப்பு கலவை வழங்கப்பட்டது. தடுப்பூசிகள் போடப்பட்டன. ஊராட்சி தலைவர்கள் ஆனந்தன், கலைச்செல்வி சிவமணி, துணைத் தலைவர்கள் மனோகர், செல்வராசு மற்றும் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வேளாண் அதிகாரிகள் தகவல் நடப்பு குறுவை பருவத்துக்கு தயார் நிலையில் உரங்கள்

***திருச்சி***: திருச்சி மாவட்டத்தில், நடப்பாண்டு குறுவை பருவத்துக்கு தேவையான உரங்கள் கையிருப்பு உள்ளது, என, வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

திருச்சி மாவட்டத்தில், ஆண்டு சராசரியாக, 762 மி.மீ., மழை பெய்ய வேண்டும். கடந்த மே மாதத்தில், சராசரி மழையளவு, 135 மி.மீ.,. ஆனால், திருச்சி

மாவட்டத்தில், 143 மி.மீ., மழை பெய்துள்ளது. இதனால், கோடை உழவு செய்ய விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர்.

கடந்தாண்டில், 3,77 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள், திருச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில், 5.55 லட்சம் டன்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறுவை பருவத்தில் மட்டும், 17 ஆயிரத்து, 500 ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு, நாற்றங்கால் விடும் பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். குறுவை சாகுபடிக்கு ஏற்ற வகையில், ஆடுதுறை-36 மற்றும் ஆடுதுறை 43 ஆகிய நெல் விதைகள், 40 டன் வேளாண்மை விரிவாக்க மையம் மூலம், 10 ரூபாய் மான்யத்தில் விற்பனை செய்யப்படுகிறது. குறுவை சாகுபடி குறித்து, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், வேளாண்மை அதிகாரிகள் கூறுகையில், "நடப்பு குறுவை பருவத்துக்கு தேவையான யூரியா, 4,112 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி., 5,267 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 3295 மெட்ரிக் டன்னும், கூட்டு உரம், 6,716 மெட்ரிக் டன்னும், மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் உரக்கடைகளில் போதிய இருப்பு உள்ளது' என்றனர்.

## கொடைக்கானல் மலைப்பகுதியில் மழை: அணைகளின் நீர்மட்டம் உயர்வு

**பழநி** : மேற்குதொடர்ச்சிமலை கொடைக்கானல் மலைஅடிவார பகுதிகளில் பெய்யும் மழையால், பழநி அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. கொடைக்கானல் மலைப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக, பழநி வரதமாநதி, பாலாறுபொருந்தலாறு, அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரம்: வரதமாநதி அணை க்கு, வினாடிக்கு 20 கனஅடி நீர்வந்து கொண்டிருக்கிறது. 2 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் தற்போதைய நீர்மட்டம் 44 அடி (மொத்தம்67 அடி)யாக உள்ளது. பாலாறுபொருந்தலாறு அணைக்கு, வினாடிக்கு 14 கன அடி நீர்வரத்து உள்ளது. 7 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 30.05 அடி(மொத்தம் 65 அடி)யாக உள்ளது. குதிரையாறு அணைக்கு நீர்வரத்து

இல்லை. 3 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 38.49 அடி (மொத்தம் 80 அடி)யாக உள்ளது. பரப்பலாறு அணை 18.03 ( மொத்தம் 90அடி), நங்காஞ்சியாறு அணை 9.81 அடி( மொத்தம் 40 அடி). குடகனாறு அணை நீர்மட்டம் 4.40 அடி (மொத்தம் 27.4அடி) உள்ளது.

## வாழை உற்பத்தியாளர் கம்பெனி; விவசாயிகளிடம் ஆர்வமில்லை

**தேனி :** தேனி மாவட்டத்தில் வாழை உற்பத்தியாளர் கம்பெனி அமைக்க விவசாயிகளிடம் ஆர்வமில்லை.

தேனி மாவட்டத்தில் எட்டாயிரம் எக்டேருக்கும் அதிக பரப்பில் வாழை சாகுபடி நடந்து வருகிறது. இதனால் இங்கிருந்து வாழையினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தோட்டக்கலைத்துறை ஆர்வம் காட்டி வருகிறது.

இதற்கு வசதியாக வாழை விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.இதற்கு ஒவ்வொரு பகுதியிலும் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகளை அழைத்து குழுக்கள் அமைத்து, ஒருங்கிணைத்து இப்பணிகளை செய்ய வேண்டும். ஆனால் இந்த குழுக்களில் சேர விவசாயிகள் போதிய ஆர்வம் காட்டவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தோட்டக்கலைத்துறை முயற்சிகள் மேற்கொண்டும் இன்னமும் மாவட்டத்தில் 50 குழுக்கள் கூட அமைக்கப்படவில்லை.இருப்பினும் மாவட்டம் முழுவதும் வாழை விவசாயிகளை கொண்டு குழுக்கள் அமைத்து, அக்குழுக்களை ஒருங்கிணைத்து கம்பெனி அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 45 நாள் மீன் பிடிக்க தடைக்காலம் முடிந்தது; உற்சாகத்துடன் மீனவர்கள் கடலுக்கு சென்றனர்

**தூத்துக்குடி** : கிழக்கு கடல் பகுதியில் நேற்று முன் தினம் முதல் மீன் பிடி தடைக்காலம் முடிந்தது. இதனையொட்டி மீனவர்கள் உற்சாகத்துடன் நேற்று அதிகாலை 4 மணிக்கு மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

கிழக்கு கடல் பகுதியான வங்காள விரிகுடா பகுதியில் ஏப்., 15 முதல் 45 நாட்களுக்கு மீன் பிடி தடைக்காலம் துவங்கியது. மே 29 வரை இந்த தடை அமலில் இருக்கும். தடைக்காலத்தில் விசைப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது.

நேற்றுமுன் தினத்துடன் தடைக்காலம் முடிவடைந்ததால், நேற்று அதிகாலை 4 மணிக்கு கடலில் மீன் பிடிக்க விசைப்படகுகளில் மீனவர்கள் சென்றனர். இனப்பெருக்க காலம்: கடல் பகுதியில் தொடர்ந்து விசைப்படகுகள் மூலம் மீன் பிடித்து வருகின்றனர்.

கடலில் உள்ள மீன் வளம் குறைந்து கொண்டே வருகிறது. மீன்கள் இனப்பெருக்கம் செய்வதற்காக 45 நாட்கள் மீனவர்கள் கடலுக்குள் செல்ல தடை விதிக்கப்படுகிறது. இக்காலங்களில் மீன் வளம் அதிகரித்தால், மீனவர்களுக்கு தொடர்ந்து அதிகமான மீன்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. பராமரிப்பு பணிகள்: மீன் பிடி தடைக்காலங்களில் மீனர்கள் தங்களது படகுகள், மீன் பிடி வலைகள் பராமரிப்பு பணியை மேற்கொள்வார்கள்.

மீனவர்களுக்கும் ஓய்வு கிடைக்கும். மீனவர்களுக்கு தடைக்காலத்தில் அரசு சார்பில் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. 400 படகுகள் சென்றன: தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி,வேம்பார்,தருவைகுளம், வீரபாண்டிய பட்டிணம் உட்பட முக்கிய பகுதிகளில் உள்ள 400 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்குள் சென்றன.

தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டுக்கு 47 ஆயிரத்து 850 டன் மீன் பிடிக்கப்படுகிறது, என்பது குறிப்பிடதக்கது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## டெல்டா மாவட்டங்களில் 2.5 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி



**தஞ்சை:** மேட்டூர் அணை ஜூன் 12ல் திறக்க முடியாத நிலை உள்ளதால், இந்த ஆண்டு டெல்டாவில் குறுவை சாகுபடி இலக்கு இரண்டரை லட்சம் ஏக்கராக குறைந்தது. காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் ஜூன் மாதம் குறுவை சாகுபடி முழுவீச்சில் தொடங்கும். நாகை மாவட்டத்தில் குறுவை சாகுபடி பணிகளை விவசாயிகள் எப்போதுமே முன்னதாகவே தொடங்கி விடுவார்கள். இந்த ஆண்டும் இங்கு குறுவை பணிகள் தொடங்கி நடந்து வருகிறது. 105 நாட்களில் அறுவடை ஆகும் குறுகிய கால நெல் ரகங்கள் இந்த பருவத்தில் சாகுபடி செய்யப்படும். இதற்காக அனைத்து வேளாண்மை கிடங்குகளிலும் இந்த விதைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இருந்தால் குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணை வழக்கமாக ஜூன் 12ம் தேதி திறக்கப்படும். இதன்மூலம் 3 மாவட்டங்களிலும் சுமார் 6 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி நடைபெறும். ஆனால் நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணை நீர்மட்டம் 38.120 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 2,689 கனஅடியாக உள்ளது. மேட்டூர் அணை

நீர்மட்டம் 90 அடியாக இருந்தால் மட்டுமே ஜூன் 12ல் தண்ணீர் திறக்கப்படும். தற்போது, தண்ணீர் 38 அடி மட்டுமே இருப்பதால் அணை திறப்பதற்கு வாய்ப்பு இல்லை. எனவே டெல்டா விவசாயிகள் பம்ப்செட் தண்ணீரைக்கொண்டு குறுவை சாகுபடி பணிகளை தொடங்க வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே இந்த ஆண்டு இரண்டரை லட்சம் ஏக்கரில் மட்டும் குறுவை சாகுபடி நடக்கிறது. கர்நாடகாவில் மழை பெய்து காவிரியில் தண்ணீர் வரத்தை பொருத்து மேட்டூர் அணை 12ம் தேதி திறக்கப்படும் நிலை ஏற்பட்டால், சாகுபடி இலக்கு மேலும் அதிகரிக்கும். தற்போதுள்ள சூழ்நிலையில் குறுவை சாகுபடிக்கு விவசாயிகள் நிலத்தடி நீரையே நம்பி உள்ளனர். எனவே தினமும் மும்முனை மின்சாரம் தடையில்லாமல் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர். வரும் 1ம் தேதி முதல் தமிழகத்தில் மின்வெட்டே இருக்காது என அரசு அறிவித்துள்ளதால் விவசாயிகள் குறுவை பணிகளை முழுவீச்சில் தொடங்கி விட்டனர். ஜூன், ஜூலை மாதங்களில் தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் வழங்கினால் குறுவை பயிர் வளர்ந்து விடும். ஆகஸ்ட் மாதத்தில் மேட்டூர் தண்ணீர் கிடைத்து விடும் என விவசாயிகள் நம்புகின்றனர்.

**இன்றும், நாளையும் தமிழக கடல் பகுதியில் ராட்சத அலைகள்**



**நாகர்கோவில்**: தமிழக, கேரள கடல் பகுதியில் இன்றும், நாளையும் ராட்சத அலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குமரி மாவட்டத்தில் குளச்சல் முதல் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வரையிலான கிழக்கு கடற்கரை பகுதியில் இன்றும், நாளையும் ராட்சத அலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜூன் 1ம் தேதி இரவு

11.30 மணி வரை இந்த பெருங்காற்றலை எச்சரிக்கை அமலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 9 முதல் 16 அடி உயரம் வரை அலைகள் எழலாம் என்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும் தேசிய கடல் தகவல் சேவை மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடை காலம் அமலில் இருந்ததால் மீனவர்கள் கடந்த ஒன்றரை மாத காலமாக மீன்பிடிக்க செல்லவில்லை. தற்போது மீன்பிடி தடை காலம் முடிவுக்கு வந்திருப்பதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல தயாராகியுள்ளனர். குமரி மாவட்ட மீனவர்கள் ஜூன் 2ம் தேதி முதல் கடலுக்கு செல்ல திட்டமிட்டுள்ளனர்.

## இலக்கை தாண்டியது கோதுமை கொள்முதல்



**சண்டிகார்**: ஹரியானாவில் கோதுமை கொள்முதல் கடந்த ரபி பருவத்தில் 58.68 லட்சம் டன்னாக இருந்தது. இந்த ஆண்டு 11 சதவீதம் அதிகரித்து 64.98 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதன்மூலம் நடப்பு ஆண்டு இலக்கான 65 லட்சம் டன்னை எட்டியுள்ளது. அரசு கொள்முதல் நிலையங்கள் 64.95 லட்சம் டன் கோதுமையை கொள்முதல் செய்துள்ளன. இதில் 2,813 டன் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. ஹரியானா மாநில உணவு வழங்கல் மற்றும் விற்பனை கூட்டுறவு நிறுவனம் அதிக பட்சமாக 25.17 லட்சம் டன் கோதுமையை வாங்கியுள்ளது. அதற்கு அடுத்ததாக மாநில உணவு வழங்கல் துறை 18 லட்சம் டன் வாங்கியுள்ளது என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கர்நாடகாவில் விளைச்சல் பாதிப்பு அரிசி மூட்டைக்கு ரூ.300 உயர்வு



**சேலம்**: கர்நாடகாவில் நெல் விளைச்சல் பாதிப்பால் அரிசி வரத்து குறைந்துள்ளது. இதனால், 100 கிலோ எடை கொண்ட அரிசி மூட்டைக்கு ரூ.300 முதல் ரூ.400 வரை விலை அதிகரித்துள்ளது. கர்நாடகாவில் மழை இல்லாததால், அங்கு நெல் விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் சேலம் மார்க்கெட்டுக்கு வரவேண்டிய அரிசி வரத்து பாதியாகி, விலை உயர்ந்து வருகிறது. இது குறித்து சேலம் செவ்வாய்பேட்டை மொத்த அரிசி வியாபாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் நடப்பாண்டு நெல் விளைச்சல் குறைந்துள்ளது. அதே நேரத்தில் கர்நாடகாவில் ஓரளவிற்கு விளைச்சலை தந்தது. இதனால் கடந்த பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கர்நாடகாவில் இருந்து அதிகளவு அரிசி வந்தது. கடந்த சில மாதமாக அங்கும் மழை இல்லாததால் நெல் விளைச்சல் பாதித்து, அரிசி வரத்து குறைந்துள்ளது. 1,000 மூட்டைகள் வந்த கடைக்கு, 500 முதல் 600 மூட்டை மட்டுமே வருகிறது. கடந்த 20 நாட்களுக்கு முன்பு ரூ.4,200க்கு விற்ற 100 கிலோ பொன்னி அரிசி, நேற்று நிலவரப்படி ரூ.4,600 முதல் ரூ.4,800 எனவும், ரூ.3,400க்கு விற்ற பிபிடி பொன்னி அரிசி ரூ.3,800 முதல் ரூ.4,200 எனவும், ரூ.3,200க்கு விற்ற கர்நாடகா ஸ்டீம் அரிசி ரூ.3,400 எனவும், ரூ.3,600க்கு விற்ற கிராந்தி கார் இட்லி அரிசி ரூ.3,800 முதல் ரூ.4 ஆயிரம் எனவும், குண்டு கார் ரூ.3 ஆயிரம் என விற்கப்படுகிறது. சராசரியாக மூட்டைக்கு ரூ.300 முதல் ரூ.400 வரை விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வால் மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தற்போது தமிழகத்தின் அரிசிதான் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கிறது. கர்நாடகா அரிசி வந்ததால் தான் அரிசி விலை குறையும். இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

## 2,850 பயனாளிகளுக்கு கறவை மாடு: கலெக்டர் தகவல்

**திருவள்ளூர்**, : திருவள்ளூர் மாவட்டத்தில் பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2,850 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் கலெக்டர் வீரராகவராவ் வெளியிட்டுள்ள அறிக்கை: விலையில்லா கறவை பசு மற்றும் வெள்ளாடு வழங்கும் திட்டத்தில், தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஒரு பயனாளிக்கு 4 ஆடு வீதம் 31 மாவட்டங்களில் 4 லட்சம் பயனாளிகளுக்கு 16 லட்சம் வெள்ளாடுகள் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் 2012, 2013, 2014 ஆண்டுகளில் 2,850 பேருக்கு 2,850 கறவை பசுக்களும், 14,234 பேருக்கு 56,936 வெள்ளாடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் தமிழ் வருட பிறப்பு அன்று பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகளின் எடையை அதிகரிக்கவும், இனப்பெருக்க பரிசோதனை, வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டைக்கு 1000 டன் நெல் அரவைக்கு சென்றது

**தஞ்சை,** : தஞ்சையில் இருந்து ஆயிரம் டன் நெல் அரவைக்கு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சென்றது.

தஞ்சை மாவட்டத்தில் அறுவடை செய்த நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு சொந்தமான நேரடி நெல் கொள்முதல் நிலையம் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு, குடோன்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு பாதுகாப் பாக இருந்த நெல் மூட் டைகள் அருகில் உள்ள மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு தஞ்சை ரயில்வே ஸ்டேச னில் இருந்து ஆயிரம் டன் நெல் மூட்டைகள் 25 வேகன்களில் நேற்று அனுப்பி வைக்கப்பட்டது.

**<u>சிவகங்கை மாவட்டத்தில் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

**சிவகங்கை,** : சிவகங்கை மாவட்டத்தில் பெய்துவரும் தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 2 ஆண்டுகளாக வடகிழக்கு பருவ மழை மற்றும் தென் மேற்கு பருவமழை பொய்த்துப்போனதால் கடும் வறட்சி நிலவியது. குளங்கள், கண்மாய்கள் வறண்டு காணப்பட்டது.

திருப்புவனம், மானாமதுரை, காளையார்கோவில், காரைக்குடி, கல்லல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 1 லட்சத்து நான்காயிரம் ஹெக்டேருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியால் விவசாயம் பாதிப்படைந்து. மேலும், பொதுமக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது.

இந்நிலையில், தற்போது சிவகங்கை மாவட்ட பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்யத் தொடங்கியுள்ளது.

சிவகங்கை, காரைக்குடி, காளையார்கோவில், திருப்பத்தூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ‘தற்போது பெய்துவரும் மழையால் வெப்பத்தை குறைத்துள்ளது.

குளங்களிலும், கண்மாய்களிலும் நீர் பெருகியுள்ளதால், பொதுமக்களுக்கும், கால்நடைகளுக்கும் குடிநீர் பிரச்சினை ஓரளவு தீர்ந்துள்ளது.

கால்நடைகளுக்கு தீவன பிரச்சினை இல்லை.

தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இந்த ஆண்டு விவசாயம் பாதிக்கப்படாது’ என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தேவூர் வாரச்சந்தையில் காய்கறிகள் விலை உயர்வு**



**தேவூர்,**

தேவூரில் வாரந்தோறும் வியாழக்கிழமை வாரச்சந்தை நடைபெறுவது வழக்கம். அதன்படி நடைபெற்ற வாரச்சந்தையில் தக்காளி கிலோ ரூ.30–க்கும், கேரட் ரூ.40–க்கும், பீன்ஸ் ரூ.25–க்கும், பீர்க்காங்காய் ரூ.50–க்கும், வெண்டைக்காய் ரூ.30–க்கும், சொரக்காய் ரூ.8–க்கும், உருளைக்கிழங்கு ரூ.45–க்கும், பச்சைமிளகாய் ரூ.50–க்கும், சின்ன வெங்காயம் ரூ.30–க்கும், பெரிய வெங்காயம் ரூ.20–க்கும், தேங்காய் ஒன்று ரூ.15–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், காய்கறிகள் வரத்து குறைந்துள்ளதால் கடந்த வாரத்தை விட இந்த வாரம் விலை சுமார் ரூ.5 முதல் ரூ.10 வரை உயர்ந்துள்ளது என கூறினர்.